<u>2026 ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 107/2025</u>

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 (LW3) – ஜெயக்குமார் |
| தகப்பனார் பெயர்: | ராமையா |
| ஊர்: | உத்தமபாளையம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கால்நடை மருத்துவர் |
| வயது : | 54 |

05.08.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கால்நடை மருத்துவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் உத்தமபாளையத்தில் ஜே.ஜே.ரெசிடென்சி என்ற பெயரில் லாட்ஜ் நடத்தி வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 23.01.2025 ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் பொதுவாக எனது லாட்ஜிக்கு வருவது வழக்கம். 23.01.2025 ம் தேதியன்று காலை 8.00 மணிக்கு லாட்ஜிக்கு கழிவறைக்குள் இருக்கும்போது சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தபோது, லாட்ஜின் படிக்கு கீழே பக்கவாட்டில் ஒருவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். வெளியில் சென்று யாரையாவது அழைக்கலாம் என்று சென்று பார்த்தேன், அப்போது ஹைவே பேட்ரோல் வந்தார்கள், நான் அவர்களுக்கு தகவல் சொன்னேன்.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் 23.01.2025 ம் தேதி காலை 8.15 மணிக்கு நான் எனது லாட்ஜில் உட்கார்ந்திருந்தபோது, எனக்கு தெரிந்த பிரசாத் என்பவரை 1வது எதிரி அனீஷ் ரஹ்மான் கையில் பட்டாக்கத்தியுடன் விரட்டி வந்தார் என்றும், பிரசாத் உயிருக்கு பயந்து லாட்ஜிக்குள் ஓடி வந்தார் என்றும், 1வது எதிரியும் லாட்ஜிக்குள் ஓடிவந்தார் என்றும், அதன் பின்னால் 2 வது எதிரி முத்து இருசக்கர வாகனத்தில் வந்து லாட்ஜின் முன்பு இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, அவரும் லாட்ஜிக்குள் ஓடிவந்தார் என்றும், லாட்ஜின் வரவேற்பாளர் அறை பின்னால் உள்ள தரைத்தளத்திலிருந்து முதல்மாடிக்கு செல்லும் படிக்கட்டு அருகே அலறல் சத்தம் கேட்டது என்றும், அங்கு ஓடிச்சென்று பார்த்தப்போது முத்து, பிரசாத்தை பிடித்துக்கொண்டும், அனீஷ் ரஹ்மான் பட்டாகத்தியால் பிரசாத்தின் உடம்பில் மாறி மாறி வெட்டி குத்திக்கொண்டிருந்தார் என்றும், சத்தம் போட்டவுடன் அனீஷ் ரஹ்மான் ரத்தம்பட்ட பட்டாக்கத்தியுடன் ஓடிவந்தார் என்றும், முத்து இருசக்கர வாகனத்தை வடக்குப் பக்கம் உத்தமபாளையம் நோக்கி எடுத்துச்சென்றார் என்றும், அனீஷ் ரஹ்மான் ரத்தம்பட்ட பட்டாக்கத்தியுடன் அதே திசையில் சென்றார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடாதது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.05 18:27:24 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
05.08.2026